தமிழ்நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1973 ஆகஸ்ட் 9.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அறிக்கைகள் அளித்தல்

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் அரிசி விநியோக முறை குறித்து உணவு அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப் பேரவையின் 82-ஆவது விதியின்கீழ் மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நேற்று, 8-8-1973, புதன்கிழமையன்று, திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோரின் கோரிக்கைகளை முதல்வர் ஏற்றுக் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லைப் பகுதிகளில் விளவங்கோடு தாலுக்கா, கல்குளத்தில் சில பகுதிகளில் விவசாயி களிடமிருந்து லெவி முறையில் வசூலித்து நிலமற்றவர்களுக்குக் குடும்பக் கார்டு மூலம் அரிசி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப் படும் என்று அறிவித்தார். அதன்படி விளவங்கோடு தாலுக்கா முழுவதிலும், கல்குளம் தாலுக்காவில் கப்பியறை, வாள்வச்ச கோஷ்டம், ஆத்தூர், அருவிக்கரை, மேக்கோடு, திருவட்டார், திருப் பரப்பு, குலசச்சல் ஆகிய கிராமங்களில் இந்த ஏற்பாடு அமல் செய்யப்படும். இந்த வட்டாரத்திற்குள் வெளியிலிருந்து தனியார் மூலம் அரிசி கொண்டுவர அனுமதிக்கப்படமாட்டாது. ஒரு நபருக்கு வாரத்திற்கு 2,000 கிராம், 12 வயதிற்கு உட்பட்டவர் களுக்கு 1,000 கிராம் அரிசி இந்த முறையில் கொடுக்கப்படும். கேரளாவிற்கு கள்ளக் கடத்தலைக் தடுக்கும் பொருட்டு மாவட்ட எல்லையிலும், குறிப்பிட்ட பகுதிகளின் எல்லையிலும் தீவிரமாகக் கண்காணிக்கப்படும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]